# ஆத்ம ஜோதி



# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்


சோதி 8 | துர்முகிஸு ஆடிமீ 1-ந்வ (16–7–56) | சுடர் 9


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | கந்தபுராணமும் நாமும் | 257 |
| 2 | முருகவேள் உவந்திடும் விரதங்கள் | 259 |
| 3 | இன்பமே எந்நாளும் துன்பமில்லை | 262 |
| 4 | திருமுறைக் காட்சி | 265 |
| 5 | கல்வியற்ற மனிதனே உலகில் இல்லை | 269 |
| 6 | ஸ்ரீ கதிரைமணி மாலை | 270 |
| 7 | மனம் | 272 |
| 8 | நானும் எனது குருநாதரும் | 275 |
| 9 | சைவசமயமும் சேவையும் | 277 |
| 10 | மக்களுடைய பாஷையில்......... | 279 |
| 11 | சுவாமி சிவானந்தரின் அறிவுரைகள் | 281 |
| 12 | யோக ஆசனங்கள் | 284 |
| 13 | திருப்போரூர்ச் சந்நிதி முறைத்திரட்டு | 287 |
| 14 | ஞானப் பொன் | 288 |
| 15 | தமிழ்மறைக் கழகம் | கவர் 2ஆம் பக்கம் |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:– நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]

# கந்தபுராணமும் நாமும்.

**துயரங்கட்குக் காரணம்:**

முந்தொருகாலத்தின் மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர் செய்த வல்வினையதனாலே
யந்தமின்மறை யெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவருமருளுற்றார்.

அவனியலற மெல்லாமருவினையென நீக்கிப்
பவநெறியறமென்றே பற்பலருஞ் செய்யப்
புவனமதுண்டோனும் போதனுமது காணச்
சிவனருளாலன்றி தீர்கில திதுவென்றார்.

**இந்திரன் முதலியோர் ஈசனிடம் முறையிடுதல்:**

தீதினையகற்றவுந் திருவை நல்கவுந்
தாதையரல்லது தனயர்க்காருள
ராதலினென்மையினியளித் தியாளென
வோதினன் வணங்கின னும்பர் வேந்தனே.

அப்பொழுதரியயனைய வெய்யசூர்
துப்புடனுல குயிர்த் தொகையை வாட்டுதல்
செப்பரிதின்னினிச் சிறிதுந் தாழ்க்கலை
யிப்பொழுதருள்கென வியம்பி வேண்டினார்

**தேவர்கள் புலம்புதல்;**

அல்லல் புரியுமவுணர் பணியால்வருந்தித்
தொல்லையுள மேன்மையெலாந் தோற்றனமே மற்றினிநா
மெல்லவரும் வெள்ளிமலைக்கேகி யிறைவனுக்குச்
சொல்லி நமது துயரகற்றிக் கொள்வோமே.

**சயந்தன் சிறையில் வருந்துதல்:**

துறந்ததோ பேரறந் தொலையுந் தீம்பவஞ்
சிறந்ததோ மாதவப் பயனுந் தேய்ந்ததோ
குறைந்ததோ நன்னெறி கூடிற்றோகலி
யிறந்ததோ மறைசிவனில்லை யோவெனும்.

## வீரவாகுதேவர் சயந்தனைத் தேற்றுதல்;

சிறுமிதிவேள்வி நண்ணித் தீயவினுகர்ந்தபாவ
முறைதனில் வீரன் செற்றுமுற்றிலுமுடிந்ததில்லை
குறைசில விருந்த வாற்றாற் கூடியதுமக் கித்துன்ப
மறுமுகப் பெருமானன்றியாரிது நீக்கற்பாலார்.

## தேவர்கள் முருகனிடம் சரண்புகுதல்

தேவர்கள் தேவே யோலஞ் சிறந்த சிற்பரனே யோலம்
மேவலர்க் கிடியேயோலம் வேற்படை விமலா வோலம்
பாவலக் கெளியாயோலம் பன்னிருபுயத்தாயோலம்
மூவருமாகிநின்ற மூர்த்தியே யோலமோலம்.

## துயர்தீர்ந்த தேவர்கள் போற்றுதல்

கார்தடிந்துதுய்க் குங்கனைகடலின் நீர் வறப்பப்
போர்தடிந்துசெல்லும் புகர் வேல்தனைவிடுத்துச்
சூர்தடித்தாயன்றோ தொழுமடியேயம் வல்வினையின்
வேர்தடிந்தாய் மற்றெமக்கு வேறோர் குறையுண்டோ.

மாறுமுகங் கொண்டுபொருவல்லவுணர் மாளாமல்
நூறுமுகமெட்டு நோதக் கனபுரியத்
தேறுமுகமின்றித் திரிந்தேமையாளவன்றோ
ஆறுமுகங் கொண்டே யவதரித்தா யெம்பெருமான்

நீதி முறையதனினில்லா வசுரர்புரி
தீதுபலவுளவுந் தீர்ந்தோம் பழியகன்றோம்
வேதநெறி தொல்லை வெறுக்கையொடு பெற்றனமால்
ஏதுமிலையாலெமக் கோர் குறையெந்தாய்.

## வாழ்த்து.

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலா
நன்னெறியொழுகச் செய்து நவையறு காட்சிநல்கி
என்னையுமடியருக்கி யிருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.



# முருகவேள் உவந்திடும் விரதங்கள்.

(ஆசிரியர்)

நமது வாழ்வில் சொல்லரிய அல்லல் தரும் 'நான்' என்னுஞ் செருக்கை ஞானவாள் கொண்டு வெட்டி வீழ்த்தி உய்கதி அருளும் உத்தம புருஷர்களே உண்மையான குருமார் ஆவர். 'குரு' வென்னும் பட்டம் அவ்வித மெய்ஞ்ஞானிஒருவருக்கே பொருந்தும். அப்படியான ஞான தேசிகனின் திருவடிகளில் சரண்புகும் பாக்கியம் கிடைத்த சீடனுக்கு தன் குருநாதன் புகழைப் பேசுவதிலும் பார்க்க விசேடித்த கைங்கரியம் பிறிதொன்றிராது. நவபாரதத்தின் புதுயுக நபியாகிய விவேகானந்தரின் வாழ்க்கையிலும் குரு பக்தியின் மகிமையை ஒப்பற்ற முறையில் கண்டுள்ளோம். ஆகையால், இதை விளக்க பழைய புராணங்களிலோ இதிகாசங்களிலோ இருந்து எடுத்துக்காட்டுகள் தேடவேண்டிய அவசியமில்லை.

முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்ற அடியார்களுள் பிரமதேவர் முதன்மை பெற்றவராவர். "குமரவேள்மேல் பக்தியுடையோர் தம்மின் முதல்வ!" என நாரதர் அவரை அழைத்ததாக மயூரகிரிமான்மியம் கூறுகின்றது. தமது குருநாதனாகிய முருகன் பெருமையை வாயார வாழ்த்தி மகிழவேண்டுமென்ற ஆர்வம் பிரமதேவரின் உள்ளத்தில் நெடுங்காலமாகப் பொங்கிக்கொண்டிருந்தது அதற்குரிய சந்தர்ப்பம் எப்போதான் கிடைக்குமென ஆவலுடன் காத்திருந்தார். ஓர் நாள் நாரதர் அவரை அணுகி, குமரி கண்டத்திலுள்ள மலைகளுள்ளே குன்றக்குடியில் சுப்பிரமணியக் கடவுள் தமது இரு தேவிமார்களுடன் விரும்பி வீற்றிருக்கும் காரணத்தையும், அங்குள்ள தீர்த்தங்களின் மகிமையையும், அத்தினத்தில் பெருமானை அர்ச்சித்து அரும்பேறு பெற்ற பரிசுத்தர் யாவர் என்பதையும் தமக்கு விபரித்துக் கூறுமாறு வேண்டினார். தமது கனவு நனவாகப் போவதை உணர்ந்த நாரதரின் உள்ளம் பூரித்தது.

"ஏடலர் கமல மன்னமுகமிரு மூன்றுங் கண்ணும்
பீடுறுகர மீராறும் பிறங்கிய படையுந்தாளுங்
கோடிமன்மதரு மெண்ணில் கோடிசூரியரு மொவ்வா
நீடெழி லுருவமா கநெஞ்சினி லிருத் திச்சொல்வான்"

என்றபடி முருகனைத் தியானித்து அவனருள் கொண்டு அவன் திருக் கதையைச் செப்பலுற்றார். இக்கதைத் தொடர்பில் முருகனுக்கு உவந்த விரதங்களும் அவற்றை அனுஷ்டிக்கும் விதிகளும் விபரிக் கப்பட்டுள்ளன.

மேல்வாரியாகப் பார்ப்பவர்கட்கு தவமும் விரதமும் ஒன்று போலத் தோன்றலாம். பேசும் போதும் எழுதும் போதும் சிலர் இரண்டையும் ஒரே கருத்தில் பாவித்தும் விடுகின்றார்கள். அற நூல்களில் விதித்தபடி கழுவாய்களாகச் செய்யப்படும் சில பிராயச் சித்தங்கள், கைமை நோன்பு முதலாயவை பல இடங்களில் தவ மென அழைக்கப்பட்டபோதிலும், தவத்திற்கும் விரதத்திற்கும் பெரியவித்தியாசமுண்டு. "தவம்" என்ற தமிழ்ச்சொல் "தப" என்ற வடமொழியிலிருந்து வந்தது. இது உலையில் உருக்குதல் என்னும் பொருளுடையது. அதாவது சீவனைப்புவி மாயையான அக்கினியில் போட்டு உருக்கி மாற்றேற்றி மேலானதெய்வ நிலையை யடையச்செய்யும் உபாயமே தவமாகும். கீதைஏழாம் அத்தியா யத்தில், தவஞ்செய்பவர்களிடத்தே தாம் தவமாக இருப்பதாகக் கூறிய கிருஷ்ண பரமாத்மா, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றி னாலும் செய்யப்படும் தவமகிமையைப் பிறிதோர் அத்தியாயத்தில் விபரமாக விளக்கியுள்ளார். சேக்கிழார் வாக்கில் "தவவல்லி" "தவநெறி" "தவவேந்தர்" போன்ற சொற்றொடர்கள் பல இடங் களில் வந்திருப்பதையும், கடவுண்மாமுனிவர் "தவமெனும் பெரிய வித்துள் தங்கியே அங்குரித்து" என திருவாதவூரரின் பிறப்பை விளக் கியிருப்பதையும் உற்றுநோக்குக.

விரதமானது எல்லாமதங்களிலும் இடம்பெற்ற ஒன்று. தவ மோவெனில் இந்துமத நூல்களில் சிறப்பிடம்பெற்றுள்ளது. கிறிஸ் தவர், இஸ்லாமியர் முதலியோரால் முறையாக அனுஷ்டிக்கப்படும் நோன்புகளும், பரா சரஸ் மிருதி பிராயச் சித்த காண்டத்தில் சொல் லியபடி இந்துக்கள் பேணும் பல்வேறு கிருச்சிரம் சாந்திராயணம் முதலாய விரதங்களும் ஒரே விதமானவையாகும். தவத்தின் பய

னது விரதத்தின் பயனிலும் பார்க்கப் பன்மடங்கு சக்திவாய்ந்தது. முந்தியது ஒரு இனத்தையோ சமுதாயத்தை உயர்த்தவல்லது. பிந்தியது பெரும்பாலும் அனுஷ்டிப்பவர்கட்கு மாத்திரமே நன்மையளிக்கும் தரத்தது.

முருகப் பெருமானுக்கு உவந்த விரதங்கள் மூன்று. மயூரகிரிப் புராணம் இம்மூன்றையும் அழகாய் விபரிக்கின்றது. அதின்படி கார்த்திகை விரதம் முதலிடம் பெறுகின்றது.

*ஆறுமாமுகனருந்திட முலையமுதளித்தோர்*
*நாறுபூங்குழற் கார்த்திகை நாரியரவர்க்கு*
*நீறுபூசிய நின்மலனளித்த நல்வரத்தான்*
*மாறில் கார்த்திகை யுத்தம விரதமாய் வதியும்.*

என்கிறது அந்தப்புராணம். இதிலடங்கிய அருங்கருத்து கந்தபுராணம் சரவணப்படலம் முப்பதாம் பாட்டிலிருந்துவந்ததாகும். கார்திகைவிரதத்தின் உரிமையை பரமசிவனிடமிருந்து முதலில் பெற்றறவர்கள் அறுமுகனுக்கு அமுதூட்டிய கார்த்திகைப் பெண்களே. இரண்டாவதாகக் கூறப்படும் நோன்பு சுக்கிரவார விரதம். இது குறைந்தது ஆறுவருடகாலமாவது அனுஷ்டிக்கப் படுதல்வேண்டும் ஐப்பசி மாதத்து முதல் வெள்ளிக்கிழமையிலிருந்து ஆரம்பிப்பதே உத்தம முறையாகும். இந்தவிரதத்தை வாழ்வு முழுவதிலும் அனுஷ்டித்தவர்கள் பலருண்டு. மூன்ருவதுவிரதம் கந்தசஷ்டி விரதம். இது மாசமொருமுறையாக பூர்வபக்க சஷ்டி திதியினன்று அனுஷ்டிக்கப்படுவது. ஆனல் இப்போது ஐப்பசிமாதத்தில் பூர்வபக்கப் பிரதமையில் ஆரம்பித்து. சஷ்டியிலன்று முடிவாகும். ஆறுநாள் விரதத்தையே குறித்து நிற்கின்றது. மாதந்தோறும் வரும் சஷ்டி விரதத்தை ஐப்பசிமாதத்திலிருந்து ஆரம்பித்து ஓர் ஆண்டுகாலம் இந்திரனும் இந்திராணியும் விதிப்படி அனுஷ்டித்ததின் பயனுக அவர்கட்கு சயந்தன் என்னும் உத்தமபுத்திரன் பிறந்ததாகப் புராணம் கூறுகின்றது. யாதாமொரு பயனும் விரும்பாது இம்மூன்று விரதங்களையும் முறைப்படி நோற்போர், முருகப்பெருமானின் திருவடி நீழலில், பிறப் பிறப்பு நீங்கிய பெருவாழ்வைப் பெற்று ஆனந்தநிலையடைவார் என்பது திண்ணம், இது வெறும் புராணக் கட்டுக் கதையல்ல, அனேக மெய்யன்பர்களின் வாழ்வில் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

(பொன். கனகராசா)

உலகியல் வாழ்விலாயினும், ஆத்மீகத் துறையிலாயினும், 'அச்சம்' என்பது பல இடையூறுகளை உண்டாக்கி எடுக்கும் முயற்சிகளை வீணாக்கி விடுகின்றது. பல நாட்கள் பயின்று மனதை ஒரு வழிப்படுத்தி, வைராக்கிய நிலையை எய்திய பின்பும், அச்சம் உள்ளத்தில் குடி புகுமாயின், பல நாட் பழகிய பண்பாடும் பயனற்றதாகிவிடும். உள்ளத்தின் உறுதி குலைந்து, உடல்வலி குன்றி, பல மன, உடல் நோய்கள் உண்டாவதற்கு வழிஏற்படுகின்றது. இதனை உட்கருத்தாகக் கொண்டே கவியரசர் பாரதியாரும் "அச்சந்தவிர்" என்று நவயுக ஆத்திசூடியில் அமைத்திருக்கின்றார்.

---

*முற்பக்கத் தொடர்ச்சி*

அரை நூற்றாண்டின்முன் இவ்விரதங்கள் மூன்றும் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் மிகவும் பக்தி சிரத்தையுடன் பாமரராலும் பண்டிதராலும் வயோதிபராலும் இளந் தம்பதிகளினாலும் கூட அனுஷ்டிக்கப்பட்டன. நாட்டின் வளத்திற்கும் சைவத்தின் செழிப்பிற்கும் தமிழின் வளர்ச்சிக்கும் அவை உறுதுணையாய் நின்றன; காலப்போக்கில் நோற்போர் தொகை அருகி அருகி, இன்று அவ்விரதங்களைப்பற்றி பஞ்சாங்கப் புஸ்தகத்தில் மாத்திரம் பார்க்கும் நிலைக்கு வந்துள்ளோம், நாம் எவ்விதம் நவீன வாழ்வில் வெற்றிகரமாகப் பின் சென்றுள்ளோம் என்பதற்கு இது ஒன்றே போதிய சான்றாகும். இன்று நம் இனத்தாரைச் சோதிக்கும் இன்னல்களும் இடர்களும் நமது மூதாதையர்கள் கையாண்ட அறநெறிகளையும் தவ விரதங்களையும் மீளவுக்குக் கொணர வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. அரசியல் வாதிகள் குரோத மனப்பான்மையும் சுயநலமும் கொண்டு போதிக்கும் சிறு நெறியிற் செல்லாது நமது சமய நூல்கள் விளக்கும், நமது மூதாதையர் வாழ்ந்து காட்டிய சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்போமாயின் நம்மை வாட்டும் பிரச்சனைகள் எல்லாம் சூரியன்முன் பனிபோல் மறையும். வேண்டப்படுவன ஒழுக்கமும் நேர்மையும் பக்தி விசுவாசமுமேயாம்!

இவ்விதம் "அச்சம்" துன்பத்தை விளைவிப்பதாயினும், அது வரும்போது தவிர்க்கமுடியாதநிலை சில காலங்களில் ஏற்பட்டுவிடுகின்றது. பலவகையான அச்சங்களை மணிவாசகப்பெருமான் ஒரு திருவாசகத்தினால் விளக்குகின்றார். அதாவது உடலைத்தைக்கும் கூரிய வேலையும், உள்ளத்தை உறுத்தி உணர்விழக்கச்செய்யும் மெல்லியலார் தங்கடைக்கண் பார்வையையும் கண்ணுற்றும் அச்சம் எழவில்லையாம். ஆனால் ஆண்டவனின் அருளைப் பருகமாட்டாத அன்னியரைக் காணும்பொழுது அவருக்கு அச்சம் பிறக்கின்றதாம் அன்னார் இறைவனின்கருணை வெள்ளத்தில் மூழ்கும் பாக்கியத்தைப் பெறாதவர்கள். அவன் தில்லையம்பலத்தில் திருத்தாண்டவ நடனமாடும்பொழுது அன்பினால் என்பெலாம் நெக்குவிட்டுருகும் வண்ணம் எம்பெருமானின் நோக்கு அமைந்திருக்கின்ற தென்பதை மிக அழகாக எடுத்து உரைக்கின்றது பின்வரும் திருவாசகம்.

*புன்புலால் வேலுமஞ்சேன் வளைக்கையார் கடைக்கணஞ்சேன்*
*என்பெலா முருகநோக்கி யம்பலத்தாடுகின்ற*
*என்பொல்லா மணியையேத்தி யினிதருள் பருகமாட்டா*
*அன்பிலாத வரைக்கண்டாலம்ம நாமஞ்சுமாறே.*

இதே கருத்தை அப்பர் சுவாமிகளும் தாம் யாருக்கும் அஞ்சுவதில்லை எனவும், தாம் யாருக்கும் அடிமையல்ல எனவும் முழங்கி பின்பு சங்கரனார் அடிவருடி ஓர் அடிமையாக இருப்பதற்கு விரும்புகின்றார். இறைவன் அருளுக்கே அடிமையாகிவிட்டால், உலகில் வாழ்ந்து சுகபோகங்களைத் துய்க்கவேண்டுமென்ற ஆசையும் குலைந்துவிடும். துன்பங்கள் எல்லாவற்றிற்கும் ஆசையே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. இந்த ஆசையைச் சிறிது சிறிதாகப் போக்குவதற்கு ஒரேவழி, அஃதாவது உலகவிஷயங்களிலும் அவைகளை அடையும்வழிகளிலும்உள்ளத்தைச்செல்லவிடாமல்இறைவன் அருளைப் பெறுவதற்குரிய வழியை நாடுவதாகும். அவ்வண்ணம் நாடினால் ஆசையற்றுத் துன்பங்கள் இல்லாமல் வாழலாம். துன்பங்கள் இல்லையேல் இன்பங்கள் வந்து அடையும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் இறைவனுக்கு அடிமையாகி அவன் அருளை அண்மியதும், ஆனந்தம் தானே வந்து அடைகின்றது. ஆகவே இறைவன் வழிபாட்டினால் அச்சந்தவிர்ந்து, ஆசை அகன்று, அவன்

அருளைப் பெறுகின்றோம், இவற்றை அப்பர் சுவாமிகள் ஒரு தேவாரத்தில் குறிப்பிடுகின்றார். அஃதாவது.—

நாமார்க்குங் குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்திலிடர்ப்படோ நடலை யில்லேர
மேமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடிஙல்லாந் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழைபோர்காதிற்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறிகின்றோமே.

இத்தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் திருவருளின் பேற்றைப் பெற்றதும் வெளி விவகாரங்களுக்குப் பணியாதவராய், பிணியற்றவராய், நடுக்கமற்று, நமனின் அச்சமற்று வாழுகின்றார். சங்கரனுக்கே தம்வாழ்வையும். தம் உயிரையும். அர்ப்பணஞ்செய்து விடுகின்றார். அதனால் செய்வதெல்லாம், நடப்பதெல்லாம். காண்பதெல்லாம், நுகர்வதெல்லாம் இறைவனின் அருள் ஆற்றல் நிரம்பியவைகளாக இருக்கின்றன, அவற்றில் இன்பத்தையே காணமுடிகின்றது துன்பம் எவ்விடத்தோ மறைந்து விட்டது, மறந்தும் அதை நினைப்பதற்கே முடியவில்லை. இதைக்கொண்டுதான் அவர் இறைவனின் பேரருள் பொலிவுறும்பொழுது தான் என்ற தன்மையற்று, என்றும் இன்பத்தையே காணும் சிறப்பையும், பாக்கியத்தையும் பெறுகின்றார். ஆதலினாற்றான் சுவாமிகளும் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று பாடியருளினர். ஆகவே நாம் இறைவன் அருளை வேண்டி அவன் தாழ் வணங்குவோமாயின் என்றும் எல்லையிலாத பேரின்பத்தைப் பெறுவோம். பின்பு எமக்கு ஆண்டவனின் அருட்பேறு கிடைத்துச் சிறப்படைவோம்.

வாழ்க வையகம் வானவன் வண்மையால்,



# திருமுறைக்காட்சி (12)

## [முத்து]

## குற்றமே செயினும் குணமெனக்கொள்ளும்கொள்கை

சுந்தரர் எம்பிரான் தோழராய் வாழ்ந்தமை உலகறிந்தவிஷயம். இறைவருடைய திருக்காட்சியைப் பெறுவதற்கு பல இடங்களில் எல்லாம் படாத பாடு பட்டுள்ளார். தோழமைத் தன்மையினாலே ஒரு சிறு அகங்காரமும்கூட. நான் இறைவனுருடைய தோழன் என்ற சிறுமுனைப்பு. ஆனால் அது பழுத்த அகங்காரம். அத்தகைய அகங்காரத்தை நீக்கச் செய்வதற்கும். இறைவர் சுந்தரரின் கண்களை இழக்கச்செய்து வருத்தியும். மீண்டும் கண்களைக்கொடுத்துத் திருவருள்பாலித்தும் உள்ளார். ஒருநல்லகுணம் சுந்தரரிடம் உண்டு. எதுதேவையானாலும் உள்ளமறைப்பின்றி எம்பிரானிடம் முறையிட்டுவிடுவார். தோழமைக்குரிய இலட்சணமும் இதுவேதான். பொன்னை நெருப்பிலேஇட்டு மாற்றேற்றுவது போல இறைவரும் சுந்தரரைப் புவிமாயைதனிலே வாட்டி மாற்றேற்றினார். சிறுவயதிலேயே பெற்றதந்தையாரிடம் வளரவிடாது வளர்ப்புத்தந்தையார் ஒருவரைக்காட்டிப் பிரித்தார். திருமணஞ் செய்யவேண்டுமென்ற ஆசையோடும் திருமணப்பந்தரிலே வீற்றிருந்தபோது அங்கணாய் வந்து திருமண ஆசையில் மண் அள்ளிப்போட்டார். ஒருதிருமணத்தைத் தடுத்த எம்பிரானார் இருதிருமணங்களைத் தாமேமுன்னின்று நடத்திவைத்தார். இந்நன்றியைச் சுந்தரர் மறக்கவில்லை. ஒரு பொன்கேட்டதற்கு அளவிறந்த பொன்கட்டிகளைக் கொடுத்தார். ஒருகுறித்த அளவு நெல்கேட்க நெல்மலைகளாகக்கொடுத்தார். நெல் கொண்டுசெல்வதற்கு ஒரு ஆள்கேட்க பூதகணங்கள் முழுமையுமே கொடுத்தார். இவையெல்லாவற்றையும்சுந்தரர்உள்ளத்திருந்த எம்பிரானாரின் திருவருட்பெருக்கை உன்னினார். எம்பிரானார் மீது கொண்ட தீராக் காதலால் அவரை 'வள்ளலே' என வாய்விட்டு அழைத்தார். வள்ளல் என்றால் தனக்கென்று ஒன்று இன்றி வரையாது வழங்குபவர் என்பது பொருள். இத்தகுதிக்கு இறைவரைத் தவிர வேறுயார்தான் தகுதியாகமுடியும். இராமலிங்க சுவாமிகள் இறைவரைப் பார்த்து.

"வள்ளால் உன்னைப் பாடப்பாட வாய்மணக்குதே"

என்கின்றார்.

இறைவர் தம்மை ஆட்கொண்ட வகையைச் சுந்தரர் உன்னினர் உடல் புளகம் கொண்டார். தமக்கு இறைவர் அருளியநலன்கள் எல்லாவற்றையும் சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தார். ஆனந்தம் பெருக்கெடுத்தோடியது. அவ் ஆனந்தப்பெருக்கின் போதையிலே

"மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார் வள்ளலே"

என்று வாய்விட்டுப் பேசினர். இப்படிப்பட்டதோர் ஆனந்த நிலையிலேதான் மணிவாசகப்பெருமானரும் "சங்கரா யார் கொலோ சதுரர்" என்று துள்ளிக் குதிக்கின்றார். தமது ஆனந்தமேலீட்டை "அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்" என வாய்விட்டுரைக்கின்றார்.

சுகம் அனுபவிக்கும் நிலையில் உள்ளம் ஆணவத்தின் வசப்பட்டுவிட்டது. எல்லாம் நானே என்று அகங்கரிக்கிறது. இறைவர் அந்தநேரத்திலே சம்மட்டியால் ஓங்கி ஒரு அடி கொடுக்கிறார். கற்பாறையாகக் காட்சிஅளித்த ஆணவம்சுக்குநூறாகிவிடுகிறது. அப்போ இறைவரே உம்மையன்றி நான்இல்லை, எல்லாம் நீயே அம்மா, என்றெல்லாம் இறைவரிடம் முறையிடுகின்றது உள்ளம். மறுபடியும் சுகநிலை வரும்போது பழையகுற்றமே தலையெடுத்துநிற்கும். முதலில் இறைவரிடம் முறையிட்டதெல்லாம் கள்ளமே அல்லவா? திருக்கோயிலினுள்ளே நின்று

"ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார்சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே"

என்று மனமுருக வழிபட்ட அன்பர் கோயிலின்வெளியேவந்து ஏ! தூரநில்; நீட்டு என்கின்றார். அவ்வன்பர் இறைவர்முன்னிலையில் நின்று பேசியது கள்ளம் அல்லவா?

இப்படிப்பட்ட குற்றங்கள் பலவற்றை சுந்தரர் மீண்டும் மீண்டும் செய்துள்ளார். எக்குற்றம் செய்யினும் இறைவர் குணமாகவே கொள்வார் என்பதும் அவர் அறிந்ததொன்றே. அதை விளக்கியபடியால்தான் மன்னிக்கமுடியாத பிழைகளைத்தாம் செய்ததாக ஒப்புக் கொள்ளுகின்றார்.

"கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்."

சுந்தரர் வாழ்க்கையில் இதுசகசமாகிவிட்டது. பிழைசெய்வது உடனே எம்பிரானரிடம் மன்னிப்பு வேண்டுவது. எம்பிரான் தோழரல்லவா? மிடுக்கோடு பிழை செய்வார் மன்னிக்கும்படிகூட மிடுக்கோடுதான் கேட்பார். ஓர் இடத்தில் "பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ" என்று எவ்வளவு உரிமையோடு கேட்கின்றார் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். இன்னேரிடத்தில்

"குற்றம் செயினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்"

என மிகப்பணிவோடு வேண்டுகின்றார். சிலர் பிழைகளைச் செய்து விட்டு ஒப்புக்கொள்ளவே மாட்டார், ஒப்புக்கொண்டால் தம்மைக் குறைவாக நினைப்பார்களென்ற ஒரு வரட்டுக் கௌரவம். அதோடு தாம்விட்டபிழைகளைச் சரிப்படுத்துவதற்கு நியாயம் கண்டுபிடித்தலிலேயே காலம் எல்லாங்கழிப்பார். சுந்தரரோ உடனுக்குடனேயே பிழைகளை ஒப்புக்கொண்டுவிடுவார். செய்த பிழைகளையெல்லாம் உடனுக்குடனே ஒப்புக்கொள்ளும் குழந்தைமேலே தந்தைக்கு எவ்வித அன்பு இருக்குமோ இறைவருக்கும் அவ்வித அன்பு சுந்தரர்மேலே இருந்தது. "நான் எனது என்று அறிவிலாது ஓடி ஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பன்" அல்லவா இறைவனுகிய குருநாதன். அவன் கருணையே கருணை.

தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி ஆகிய முப்புரத்தசுரர்களும் உலகத்திற்குப் பெருந்துன்பமெல்லாம் செய்துதிரிந்தனர் மக்களின் குறையீட்டுக்குக் கடைக்கணித்தருளிய எம்பெருமானர் புன்முறுவலால் முப்புரங்களையும் எரித்து மக்களுக்குக்கருணைபாலித்தார். "முப்புரமாவது மும்மலகாரியம்" என்கின்றார் பெரியார் ஒருவர். இறைவர் ஆன்மாக்கள்மீது கொண்டபேரன்பினுல் ஞானக்கண்ணுல் அவற்றை நோக்க அவற்றை மூடியிருந்த மும்மலங்களும் வெந்து நீருயின.

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவாறு உந்தீபற"

என்கின்றார் மணிவாசகப் பெருமானும். மேருமலையாகிய வில்லானது வளைவுற்றது. திரிபுரர்களுடைய துன்பவரற்றும் நிகழ்வதாயிற்று. மூன்றுபுரங்களும் சிதைவுற்றன, அப்புரங்கள் மூன்றும் உடனே ஒருமித்து வெந்ததிறம்கூறி உந்தி பறப்பாயாக. சுந்தரரும்

"செற்று மீதோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலாய்"

என்கின்றார். இறைவரது ஒரு புன்முறுவல் தீயசக்திகளை அழித்து ஆன்மாக்களுக்கு நன்மைசெய்த வகையை திருமுல்லைவாயிற் பெருமானே என்ற கருத்தோடு அழகுற அமைத்துள்ளார். இறைவரே யாதோ ஒருபற்றுமில்லாதவன், ஒவ்வொருகாலத்திலே மனிதன் கல்வி, மண், பெண், பொன்னே உற்றதுணையென்று நினைத்து ஏமாந்ததுண்டு. எதைத்துணையென்று நம்பியிருந்தானோ அவையெல்லாம் உற்றஇடத்து உதவாதிருக்கும்போது இறைவரிடம் தன்னை ஒப்படைக்கின்றான். பூரண சரணாகதிநிலையை அடைகின்றான். இதனையே "அடியேன் பற்றிலேன்" என்கின்றார். "உற்ற படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே" ஆன்மாக்களுக்கெல்லாம் தலைவரானமை பற்றியே இறைவருக்கு பசுபதி என்றபெயர் வாய்த்தது அஞ்ஞான இருளால் மூடுண்டுகிடக்கும் ஆன்மாக்களையெல்லாம் ஞான ஒளிபெறச்செய்யும் ஞானசூரியர் இறைவனானபடியால் பரஞ்சுடரே என்கின்றார். சுந்தரர் பட்டதுன்பங்களுள்ளே மிகக் கொடியதுன்பம் கண் இழந்துவருந்தியமை. அதனையே படுதுயர் களையாய் என்கின்றார். சிவபெருமானிடம் கொண்டதோழமையின் உரிமையாலும், அவரிடம் கண்ட அருள்வலிமையில் வைத்த பெருநம்பிக்கையாலும், "மிகை பலசெய்தேன்" என ஏங்குகின்றார். சுந்தரர் வாயிலாக அறியுங்கள்.

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார் வள்ளலே
கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்

செற்று மீதோடுந் திரிபுரம் எரித்த திருமுல்லை
வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர்களையாய் பாசுப
தாபரஞ் சுடரே.

பொருள்:– நான் பெற்றநன்மைகளை வேறுயார் பெறக்கூடியவர்? அருட்செல்வத்தை அளவிலாது அளிக்கும் வள்ளலே நீஉன் அடியவர் வஞ்சனையுள்ள பேச்சுக்களையே பேசிக் குற்றமுள்ள செயல்களையே செய்யினும் உன்கருணையால் அவற்றையும் குணமாகக் கொள்ளும் உனது கொள்கையால் நான்தைரியங்கொண்டு வரம்பு கடந்த செயல்கள் பலவற்றைச்செய்தேன். உலகத்தை வருத்திக் கொண்டு மேலேகிரிந்த அசுரனின் முப்புரங்களை சிரிப்பினால் எரித்த திருமுல்லைவாயிற் பெருமானே அடியவனாகியநான் வேறு ஆதர வில்லாதவன். சிவபெருமானே பரஞ்சோதியே எனக்கு நேர்ந்துள்ள மிக்கதுன்பத்தைப்போக்கி அருளுவீராக

# கல்வியற்றமனிதனே உலகில் இல்லை.

*(வினோபாஜி)*

உலகத்திலே கல்வி இல்லாத மனிதன் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஆனா, ஆவன்னா என்ற படிப்பைக்கொஞ்சம் கற்றுக்கொண்டவுடனே மிகச் சிறந்த முறையிலே தச்சுவேலை செய்பவனைக்கூட முட்டாள் என்று நாம் நினைத்துவிடக்கூடும்.

மெட்ரிக்வரை படித்த ஒரு சாதாரண பையன் தச்சுவேலை நிபுணரைப்பார்த்து வீட்டிலே தச்சுவேலை கொஞ்சம் இருக்கிறது உனக்கு என்ன கூலி வேண்டும்? என்று கேட்கிறான். "தங்களுக்கு என்ன கூலி" என்று மரியாதையாகக்கூட கேட்பது இல்லை. நம்முடைய நாட்டிலே திறமையான தொழிலாளிகள் எவ்வளவு விதமான தொழில் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்களோ அவர்களைப் பார்த்து, இன்றைக்குப் படித்தவர்கள் எல்லாம் "நீ" என்று சொல்லுகிறார்கள். "நீங்கள்" என்று சொல்வது இல்லை. இவன் ஏதோ எழுதப்படிக்கத்தெரியும் என்ற அகங்காரத்தினால் இப்படிப்பேச ஆரம்பிக்கிறான்.

# ஸ்ரீ கதிரைமணி மாலை.

[பரமஹம்ஸதாசன்]

வஞ்சப் புலியின்வாய்ப்பட்ட
மான் போற் கொடிய நஞ்சொழுகும்
வஞ்ச ரிடைப்பட் டழி வேனை,
மாறாக் கருணை வடி வோடு நீ,
'அஞ் சேல்' எனவந் தருளாயேல்,
அபலைக் கிரங்க வாரெவரோ?
அஞ்சை யடைத்தார் உள்ளுறும்
அமுதே! கதிரை யழகேசா! 40

வீசி யிழுக்கும் வேடர்வலை
மீன் போல் மடவார் வேல்விழியாம்
ஆசை வலைக் குட் பட்டழியும்
அடியேன் துயர்தீர்த் தருளாயோ?
பாசம் அறுத்த பேரறிஞர்
பாரா துளத்திற் பார்த்திடு நல்
ஈசா! உன்னை யன்றி எனக்
கேதிப் புவியில் வேறுகதி? 41

வெட்ட வெளியில் தனியாக,
வீசி யடிக்கும் பேய்க்காற்றில்
பட்ட மரம்போல் தவிக்குமெனைப்
பரமா நீகண் பாராயோ?
துட்டக் குழந்தை எனினும், பாழ்
துயரக் கிடங்கில் விழல் கண்டும்
எட்ட நின்றே பார்த்திருத்தல்
ஈன்றாள் செயலோ? கருணையிதோ? 42

சரியை கிரியை யோகத்தால்
தமியேன் பருவம் உறுவதெப்போ?
அரிய ஞானப் பொருளினை
ஐயே, நீவந் தருள்வதெப்போ?
கரிய நமன்வந் ததற்குள்ளே
கலங்கல் பாசம் வீசிவிடின்,

சிறியேன், எளியேன் கதியாது?
தீனர்க் கருளும் வானரசே! 43

நிலையில் லா, இவ் வுலகினையே
நிலையாய் எண்ணி, நிலைகெட்டு
அலையிற் பட்ட துரும்பைப்போல்
அலைந்து சுழன்று அயர்ந்திட்டேன்
விலையில் லா நின் கழலிணையை,
மெலிந்து முடிவில் விழைந்திட்ட
புலையன் எனை, நீ தள்ளுவையேல்
புவியில் வேறு புகலுண்டோ? 44

கோல் கொண் டுன்றி யேகி, நடை
குறுகிப் பாயிற் கிடந்திடு முன்,
காலன் பாசம் வீசிடு முன்,
கண்கள் வெண்பஞ் சாகிடு முன்,
ஓல மிட்டே சுற்றத்தார்
ஒப்புக் குருகிக் கதறிடுமுன்
ஞாலம் காணுக் கோல முகம்
நாயேன் காணக் காட்டாயோ? 45

வேதா கமங்கள் விரித்துரைக்கும்
விண்ணு ரமுதே! மெய்ப்பொருளே!
ஓதார் இதயத் தொளிராப்பே
ரொளியே! அடியார் உளக்கனியே!
ஆதா ரமுனை யல்லால், வே
றறியாச் சிறியேன் உய்ந்திடவுன்
பாதார விந்தப் போத ருளாய்
பைம்பொற் கதிரைப் பாவலனே! 46

வஞ்சக் காமப் புலையரிடை
வாழ்ந்தே வீணில் மடியாமல்,
அஞ்சா தென்றும் தம்கடனை
ஆற்றும் வீரர், அருந்தவத்தோர்,
செஞ்சொற் புலவர், மெய்யறிஞர்,
தினமுன் கழலைத் தொழுமன்பர்
கஞ்ச மலர்த்தாள் இணைபற்றிக்
கடைத்தே றச் செய் கதிர்வேலா!

# மனம்.

(காமகோடி)

"நான் இன்னும் மனம் என்னும் மாயாவிக்கு பரிபூரண அடிமை. மனத்தை வெல்லவேண்டும். மனம் எனக்கு அடிமை, அடிமை" என ஓயாமல் உருப்போடு...... ஆரம்ப சாதகனுக்கு முன்னேற்றத்தை அளவிடுவது மிகச்சிரமமானகாரியம். சந்தேகப் பேயை அவன் முதலில் விரட்டியாகவேண்டும். "ஸம்சயாத்மா வினச்யதி" என்று பகவான் கீதையில் அருளியிருப்பதை. மனமே உருப்போடு. "மனம் உறுதி; உடல் உறுதி; மனம் எனது அடிமை ஆத்மா எனது வழிகாட்டி." ஓயாமல் இதை உருப்போடு. சூழ்நிலையின் மேல் பழியைப்போட்டுத் தப்பிக்கப்பார்க்கிறவன் மூடாத்மா; அவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான்........ மன உறுதி திடீரென்று வராது; அதைப் பயிலவேண்டும் என்று கற்றுக்கொண்டேன். யோகநிலையை அடைய மனம் ஆறுதலடையவேண்டும். மூடா! நீ இப்போது இருக்கும் நிலையே சாசுவதம், பேரின்பம் என்று எண்ணாதே ...... முகத்திலே ஒளி ஏறவேண்டும். வாக்கிலே தூய்மை ஏற்படவேண்டும்; மனத்திலே அமைதி நிலவ வேண்டும். இதற்கு பிரார்த்தனைதான் சிறந்த உபகரணம்... செயல். செயல் என்று சிந்திப்பதில் பயனில்லை. மனம் எண்ணுவது தான் செயலாக வெளிப்படுகிறது. மனமே உலகம். நல்ல மனத்தையுடையோன் எங்கணும் நன்மையையும் ஸத்தியத்தையுமே காண்கிறான். மனம் இழுத்துச்செல்லும் பாதையில் சென்றால் வெள்ளத்திற்பட்ட துரும்புபோல் சர்வநாசமடைவாய். மனத்தை வசியப்படுத்துவது எளிதானது. ஆம், ஆனால் அதற்கு சாதனை வேண்டும். கடவுளை நம்பு, சரணாகதியடை, மனம் உறுதிபட்டுவிடும். மனத்திலே தீரமும், தூய்மையும் உதிக்கும். மூடமானுடா கேள்! ஸத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை. பொய்யை விடு, பொய் போனால் பயமில்லை, பயமில்லாவிட்டால் பொய்யும்

இல்லை... குழப்பத்தைஎறி; உறுதியைக் கடைப்பிடி. குழந்தைத் தன்மையும், தெய்வத் தன்மையும் உன்னிடத்தில் இருக்கிறது. அவை வெளிப்படாமல் நீயேதான் தடை செய்கிறாய் ...... போலிவாழ்க்கை நடத்தி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதில் பயனேதுமில்லை ...... அல்லாடும் மனம் உனதுவைரி. மனத்தைச் சச்சிதானந்தத்தில் நிலை நிறுத்து. சந்தேகங்களைக்களை. நீ முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறாய் ..... மனம் எண்ணங்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலை. அது நல்ல எண்ணங்களையும் உற்பத்தி செய்யும். தீய எண்ணங்களையும் பெற்றுத்தள்ளும். எண்ணங்களின் தன்மையை நிர்ணயிக்கவேண்டுபவன் நீயன்றி, மனம் அல்லவே அல்ல. தொழிற்சாலை யொன்றிலிருந்து வெளிவரும் பொருள்களின் அளவையோ தன்மையையோ நிர்ணயிப்பது. அதன் அதிபதியேயன்றி, யந்திரங்கள் இல்லவே. ஓ மனத்தை இயக்குபவனே, மனத்தைக்கட்டுக்குள் வைத்து அது மேன்மையுற அருள் செய்வாய்! ..... ஸாதகம்-தொடர்ந்த, உறுதி குலையாத ஸாதகம் தான் இழிதுணங்களிலிருந்து மனத்தைக் காப்பாற்றும். ஆகவே உனக்கேற்பட்ட, உன்னால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டஸாதனைகளைத் தொடர்ந்துசெய். அதுதான் உனது காப்பு. வைராக்யத்தை வளர்க்கவேண்டாம் நீ; தூய்மையை வளரு நீ. தேகத்திற்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அவ்வாறே ஆத்மாவிற்கும் மனதிற்கும். ஆத்மாவை நினைக்குமுன் தேகத்தையும், மனதையும் மாசற்றதாக்கு. தோன்றிய வழியையெல்லாம் உபயோகித்து, உபாயங்களையெல்லாம் கடைப்பிடித்து மனத்தை பரிசுத்தமாக்கு. தன்னைத்தானே உயர்த்திக்கொள்: தன்னைத் தன்னால் இழிவுறுத்த வேண்டா. தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன். தன்னைத் தான் வென்றவனே தனக்குத் தான் நண்பன்: தன்னைத் தான் வெல்லாதவன் தனக்குத் தான் பகைவன் போற்கேடு சூழ்கிறான்

மனிதன் வாழ்ந்துகொண்டுதான் இருக்கவேண்டும் என்றால், அவன் ஒன்று முன்னேறவோ அல்லது பின்னேறவோதான் செய்யவேண்டும். முன்னேற்றமென்றால், பின்னேற்றமில்லை; முன்னேற்றம் இல்லை என்றால், அதுவும் பின்னேற்றம் தான். ஒரே நிலையில் நிற்பது (முன்னேற்றமோ பின்னேற்றமோ இல்லாதநிலை) என்பது மனித வாழ்க்கையில் தொடுவானம். இதுதான் நான்

தெரிந்துகொண்ட வாழ்க்கைத் தத்துவம். இதைப்புரிந்துகொண்டவன் மேன்மையுறுகிறான்; தனக்குத் தானே நண்பனாகிறான். இதை உதாசீனமோ அன்றி அறியாமலோ செய்கிறவன் தனக்குத் தானே விரோதியாகிறான். இந் நிலை மனித சமூகத்தில் பெரும் பரிதாபத்திற்குரியது......... இலக்ஷியம் என்பது மாறக்கூடிய வஸ்துவல்ல, மாறிக்கொண்டேயிருக்கும், மனதுக்கு இலக்ஷியம் இருக்க முடியாது. அத்தகைய மனது. யனிதனுக்கு ஒரு சவால்: அவனை அலக்ஷியம் செய்கிறது.

மூட மனமே! என்று உறுதிகொண்டுவிட்டாயோ. அன்றே நன்னாள்; அந்த நிமிடமே சிரேஷ்டமானது. நீ ஒத்திப்போடும் காலமெல்லாம் மண்ணானது ......,....பகவானிடம் நம்மை ஒப்படைத்து, விடுவதைக்காட்டிலும் மேன்மையானது யாதொன்றுமில்லை, மனத்தின் அழுக்காறு முழுமையும் போய்விட்டால் தான் சரணாகதி பாவம் என்னிடம் தோன்றும் என்று நம்புகிறேன்...... அவன் கை எப்பொழுதும் நீண்டு உதவிக்குத் தயாராக நிற்கிறது. நாம் தான் அதைப் பற்றிக் கொள்ளமாட்டோமென்கிறோம்......... முன்னேற நிச்சயித்துக்கொண்டு ஒரு படி ஏறினால், ஆண்டவன் ஒன்பது படி ஏற்றிவிடுகிறான். கெட்ட செய்கையினால் ஏற்படும் விளைவை விட நற் செய்கையினால் ஏற்படும் பயன் ஆயிரம் மடங்கு பெரிது. மனித குலம் காணவேண்டிய ஆச்சரிய சம்பத்து......... மனிதனைப் புழுவோடு ஒப்பிட்டுப்பேசினால் என் விஷயத்தில் புழுவிற்கும் கோபம் ஏற்பட்டுவிடும், புழு தனது தர்மத்தை அனுசரிக்கச் சொல்லுகிறவரையில் அதற்கொரு குறைவுமில்லை. புலனுக்கு எட்டியதும் அறிவினால் சரிவர உணரப்பட்டதுமான தர்மத்தை அனுசரிக்க முயலாதவன் சராசரி மனிதன்; நியதிக்கே புறம்பாகச் செல்லுகிறவன் மனிதன் என்னும் அர்த்தத்திலிருந்து விடுபடுகிறான் ......................இனி ''மூட மனமே!'' என்று விளக்க அதிகாரமில்லை, மனத்தின் மூடத்தன்மைக்கோ புத்திசாலித்தன்மைக்கோ நான் என்று என்னுள்ளே வியாபித்திருக்கும் அந்தகாரமும், மயக்கமுமே காரணமாகும்.

ஓம்

# நானும் எனது குருநாதரும்.

[அ. இராமசாமி]

3. 1. 56 இன்றுதினம் எனது குருநாதரிடமிருந்து அவரது கலர் உருவப்படங்களும், சிவானந்த கீதை என்ற புத்தகமும் வந்தன. புத்தக ஆரம்பப்பகுதியில் ஸ்ரீ விஜயலட்சுமி M. S. G. S. S. D. L. S அவர்களின் திருவுருவத்தைப் பார்த்தேன். இப்படியும் ஒரு தமிழ்ப்பெண்மணி உண்டா! என்று ஆச்சரியம் அடைந்தேன்.

இரவு மணி எட்டு இருக்கும். அமைதியாகப் புத்தகத்தைப் புரட்டினேன். அன்னை சிவானந்த விஜயலட்சுமி, வீணையைக்கையில் ஏந்தி அளிக்கும் காட்சி என் உள்ளத்தைக் கவர்ந்தது. சற்று நேரம் கூர்மையாய்ப் பார்த்தேன். அவருடைய அங்க அமைப்பிலும் திருமுகத்தின் பொலிவிலும் வீணையை மீட்டும் விரல்களிலும் பக்தியே உருவாகிய அந்தத்தாயின் தோற்றத்தில் ஆனபக்திக் கடலிலே நான் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தேன். பிறகுஒன்றிரண்டு பக்கம் படித்தேன். அதற்குமேல் ஓடவில்லை. மறுபடியும் படத்தையே பார்ப்பதற்கு ஆவல் கொண்டது என்மனம்.

"நானும் எனது குருநாதரும்" என்ற கட்டுரையை விஜயலட்சுமி உருவமாக மாற்றிவிடலாமா? என்று யோசித்தேன். மறுகணம் உன்னைப்பற்றியும் உன் குருநாதரைப் பற்றியும்தான் எழுதலமே தவிர, விஜயலட்சுமிக்கு அதில் இடமில்லை என்று என் உள்ளம் என்னை அச்சுறுத்தியது. அன்று இரவு முழுதும் ஆனந்தமாகத்தூங்கி 4- மணிக்கு எழுந்து சாதனை செய்தேன். தியானம் முடிந்தபிறகு எனது இஷ்டதேவியின் திருநாமத்தை ஓதிக்கொண்டிருந்தேன். என் உள்ளம் குருநாதரையும் ஸ்ரீ விஜயலட்சுமியையும் சுற்றிக் கொண்டது. உன்னிடமும், உன் குருநாதரிடமும் பங்கு கொண்டவர்தான் ஸ்ரீவிஜயலட்சுமி- உங்களினின்றும் அவர் தனிப்பட்டவரல்ல. அவர் கட்டுரையில் இடம்பெறத் தகுதியுடையவரே! என்று என் இஷ்டதேவியாகிய ஆனந்த சரஸ்வதி அறிவு மூலம் எனக்குப் போதித்தாள். உடனே இந்தக்கட்டுரையை எழுதினேன்.

சிறு இரும்பாணியைக் காந்தம் இழுப்பதுபோல், என் உள்ளத்தைக் கவர்ந்த அன்னை விஜயலட்சுமியின் திருவுருவத்திற்குக் காரணம் எனது இஷ்டதேவி சரஸ்வதியின் திருக்கரத்திலே உள்ளவீணையை அவர் கையில் ஏந்தியிருந்ததுதான். வீணையைக் கையில் ஏந்திப் பக்தர்களுக்குக் காட்சிகொடுக்கும் பணியைச் செய்வதினால், இவர் சரஸ்வதி அம்சம்பெற்றவராக இருக்கவேண்டும். M. S. C. S. S. D. L. S. அடேயப்பா! இத்தனை எழுத்துக்களும் பட்டங்கள்தான்போலும் என்றேன். பிறகு இவர் சரஸ்வதி அம்சம்மட்டும் பொருந்தியவரல்ல. லட்சுமி கடாட்சமும் பெற்றவராகத் தோன்றுகிறது என்று நினைத்தேன்.

உலகப் பழமொழிக்கெல்லாம் விதிவிலக்குடைய பக்தர்களும் உண்டு. அதை அன்னை சிவானந்த விஜயலட்சுமியின் தோற்றத்திலே நன்றாகக் காணமுடிகிறது. சரசுவதி அம்சம் பெற்றவரிடத்தில் லட்சுமி அம்சமும், லட்சுமியின் அருளம்சம் உள்ளவரிடத்தில் சரசுவதியின் வித்தியா ஞானமும் குடிகொள்ளாது என்று உலகம் சொல்லும். ஸ்ரீ விஜயலட்சுமியின் திரு உள்ளத்தில் சரசுவதியையும், லட்சுமியையும் ஒன்றாக இணைத்து இருக்கிறார் என்று அவரது தோற்றம் எனக்குத் தெரிவிக்கிறது.

நான் சரசுவதி உபாசகன். என்னிடம் லட்சுமியாகிய பொருட்செல்வம் கிட்டநெருங்கப் பயப்படும். என்னிடம் வராது. வந்தால் தங்காது. உடனே போய்விடும். வித்தியா ஞானத்தையும், பொருட் செல்வத்தையும் சரிசமப்படுத்த என்னால் முடியவில்லை. ஸ்ரீ விஜயலட்சுமியின் திரு உருவப்படம் பக்தர்களின் உள்ளத்திலே பேசாமல் பேசுகிறது. அவரது திருஉருவத்தைப் பக்திக் கண்கொண்டு பார்த்துப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்தால் அதுவே போதும்போல் தோன்றுகிறது.

மேலும் சரசுவதியும் லட்சுமியுமாகிய அன்னை என்ன சொல்லுகிறார்? சிவானந்தரும் அவருடைய புத்தகமும் ஒன்றாகி, அதிலுள்ள கனிரசம் நான்தான் என்று சொல்லுவதுபோல் அவரது தோற்றம் தெரிவிக்கிறது. ஸ்ரீ அன்னை சிவானந்த விஜயலட்சுமியின் பெருமையை நான் சொல்வதினால் எனது குருநாதரின் பெருமை உலகம் சூழ் கடல்போலக் காட்சியளிக்கிறது.

# சைவசமயமும் சேவையும்.

(தென்னுப்பிரிகா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

ஒவ்வொருசமயத்தினரும் தங்கள் சமயம் உலகெங்கணும் பரவியிருத்தல்வேண்டுமென எண்ணுகின்றனர். இம்மை வாழ்வில் இன்பத்தையும், மறுமைவாழ்வில் சுவர்க்கத்தையும் அளிப்பது தங்கள் சமயந்தான் என்று ஒவ்வொருவரும் கூறுகின்றனர். தங்கள் சமயம் உலகெங்கும் பரவுதற்குவேண்டிய வேலைகளை நாடோறும் செய்துகொண்டுவருகின்றனர். அங்ஙனமே நமது சைவசமயத்தினரும் சைவசமயமானது பூவுலகெங்கும் பரவுதல் வேண்டுமென்றும் சைவசமயந்தான் உண்மையில் மக்களுக்கு இம்மைமறுமைஇரண்டினும் நல்வாழ்வளிப்பதென்றம் கூறுகின்றனர். சைவசமயத்தை வளர்ப்பதற்கு ஆங்காங்கு சிற்சில கழகங்களும் கண்டிருக்கின்றனர். ஆனால் இன்றிருக்கும் சைவசமய வளர்ப்புக்கழகங்கள் பல உண்மையில் சைவசமயத்தை வளர்ப்பனவாயில்லை, பழம்பெருமைபேசுவதையே தங்கடமைக்கொண்டிருக்கின்றன். பழம்பெருமைபேசுவதால்மட்டும் எச்சமயமும் வளரமுடியாதென்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

இன்று உலகிலே முதன்மைபெற முயற்சித்துவரும் கிறிஸ்து சமயத்தினர் எவ்வாறு தங்கள் பிரசாரத்தை நடத்துகின்றனர் என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப்பார்த்தல்வேண்டும். அன்னாரும் தங்கள்சமயத்தின் முதல்வராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பழம்பெருமைகளையெல்லாம் கூறுகின்றாரெனினும், தற்காலவாழ்விற்கேற்பத் தங்கள் பிரசாரத்தை நடத்துகின்றனர். ஊர்கள்தோறும் பலகல்வி நிலையங்களும் வைத்தியசாலைகளும், கைத்தொழிற்சாலைகளும் நிறுவி அவற்றின்மூலம் தங்கள் சமயத்தைவளர்க்கின்றனர். ஒருவரிருவராகக் கிராமந்தோறும் சென்று, ஏழைமக்கள் இல்லங்களைநாடி அவர்களைத்தங்கள் சமயத்தில் சேர்க்கின்றனர். சாதிபேதமின்றி அனைவரையும் ஒன்றெனக்கருதி கோயில்கட்குள்செல்ல அனுமதியளிக்கின்றனர். ஏழைகளுக்கு, உணவிற்கும் உடைக்கும் சிறிதுபொருளும் கொடுக்கின்றனர், ஆடம்பரமின்றித் தங்கள் சமயத்தை மூலைமுடுக்குகளிலும் பரவச்செய்துவிட்டனர். இன்னும் தங்கள் சமயம் யாண்டும் பரவுதற்குவேண்டிய வேலைகளைச் செய்துவருகின்றனர்.

நமது சைவசமயவளர்ப்புக் கழகங்களின் நிலையையுன்னு கின்றபொழுது மனதிற்கு வருத்தமேஉண்டாகிறது. அக்கழகங் களிலுள்ளபணியாளர்கள் உண்மையானபணியாளர்களாக இருக்க வில்லை. எவ்வழியில் பணியாற்றுதல் வேண்டுமென்று யோசிப்ப தில்லை. பழையகாலத்தில் எவ்விதம் சமயப்பிரசாரம் செய்தார்க ளென்று படித்தார்களோ அவ்வாறு பிரசாரம்செய்வதுதான் பயன் படும் என்று எண்ணுகின்றனர். உலகம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துசெல்லுகின்றது. தினந் தோறும் புதியபுதியமுறைகள் கையாளப்படுகின்றன. இந்நிலையில் பழைய முறையைத்தான் அநுஷ்டிக்கவேண்டுமென்பது அறிவுடை மையாகாது. பிரசங்கங்களில் சமய உண்மைகளை நன்கு எடுத்துக் கூறல் வேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள சமயப்பிரசாரகர்கள் அவ்வாறு செய்வதில்லை. "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்ற பாட்டைப்படித்து அதற்கு வியாக்கியானமும் செய்கிறார்கள். "உங்கள் சமயத்தில் என்ன உண்மைகள் இருக்கின்றன?" என்று ஒருவன் கேட்பானாயின் அதற்குச் சரியான விடையளிக்கும் ஆற்ற லைப்பல பிரசாரகர்கள் பெற்றிருக்கவில்லை. அதற்குப் பிரதியாக வசவு கொடுக்க ஆரம்பித்துவிடுகின்றனர். இத்தகையோரால் சம யம் ஒருபோதும் வளரப்போவதில்லை. சைவசமயப் பிரசாரகர்கள் ஏழைகள் குடிலை நண்ணி அவர்களுக்குச் சமயபோதனை செய்வதே கிடையாது. நகரங்களில் சென்று சபைகளில் பிரசங்கம் செய்து விட்டு "நாங்களும் சமயப்பிரசங்கம் செய்துவிட்டோம்" என்று பெருமை பேசிக்கொள்வதில் பிரயோசனம் ஒன்றுமில்லை.

சமய உண்மைகளைக் கூறும் நூல்கள் வசனநடையில் பெரி தும் தோன்றவேண்டும். அந்நூல்கள் கலாசாலையில் பாடப்புத்த கங்களாக வைக்கப்பெறல்வேண்டும். பிரசாரகர்கள் சாதிபேதம் கருதாது எல்லாவீடுகளுக்கும் சென்று சமயபோதனை செய்தல் வேண்டும். கேட்கும் கேள்விகளுக்குச் சரியானவிடையளிக்கும் ஆற்றல் வாய்ந்தோரே சமயப்பிரசாரகர்களாயிருத்தல் வேண்டும். பொறுமையில்லாதவர்கள் பிரசாரகர்களாகவிருப்பது நன்மையா காது. ஊர்கள்தோறும் சமயபோதனைக் கலாசாலைகள் ஏற்படல் வேண்டும். அங்கு சாதிபேதமின்றி எல்லாப் பிள்ளைகளையும் சேர்த் துக்கொள்ள வசதியிருத்தல் வேண்டும். சமயப்பிரசாரம் செய்வ தற்கு ஏற்றஇடங்கள் ஏழைகள்வீடுகளே என்பதை உணர வேண்டும்.

# மக்களுடைய பாஷையில் இராச்சியம் நடக்கவேண்டும்.

— (விநோபாஜீ) —

பாஷை அடிப்படையில் மாகாணங்கள் அமைப்பது என்ற முறையில் பல மாகாணங்களில் தகராறுகள் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அதைப்பற்றிஎனக்கு மிக மனவருத்தம். இது பூமிதான யக்ஞத்தின் தோல்வி என்று நான் ஒப்புக்கொண்டேன். என்னுடைய கவனம் அங்கு சென்றபோது நான்நகரத்தைப் பற்றி அக்கறை கொள்ளாதது தான்இதற்குக்காரணம் என்று நான்நினைத்தேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த இடத்தில் மறுபடியும் சொல்லவிரும்புகிறேன். "பாஷை அடிப்படையில் மாகாணங்கள் அடிப்படையில் மாகாணங்கள் அமைப்பதில் தவறு ஒன்றுமில்லை. அத்துடன் கூட நான் ஒன்று சொல்ல விரும்புகி

---

முற்பக்கத் தொடர்ச்சி

நமதுசமயத்தினரின் தொகை குறைந்துகொண்டே வருகிறது கிறிஸ்து சமையத்தினரின் தொகையோ பெருகிக்கொண்டேபோகிறது. கடந்தபத்தாண்டுக்குள். இங்கு தென்னாப்பிரிக்காவில் 12,000 பேர்கள் கிறிஸ்து மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். நமது சமயம் தாழ்வுறுவதற்குப் பலவகையான ஒவ்வாத காரியங்கள் செய்யப்படுகின்றன. அன்பர்களே! இன்னும் இவ்விதமே இருப்போமானால் நமது சமயம் உண்மையில் அழிந்து கொண்டு செல்லுமென்பதில் ஐயமில்லை. எனவே ஒவ்வொருவரும் சைவ சமயத்தை வளர்ப்பதற்கு உண்மையாகப்பாடுபடுங்கள். தீண்டாமை முதலிய வேண்டாத செயல்களை அறவே ஒழியுங்கள்! கிராமங்களுக்குச் சென்று சமயப்பிரசாரம் செய்யுங்கள்! ஏழைகள் வீடு தோறும் சென்று சைவசமயத்தின் பெருமையினை எடுத்துக்கூறுங்கள்!

றேன். அதாவது மக்களின் பாஷையில் ஒரு காரியமும் நடைபெற வில்லையென்றால். சுதந்திரம் என்பது பொருளற்றது என்றுதான் நான் சொல்லமுடியும்; மக்களுடைய பாஷையை ஹைக்கோர்ட்டிலுள்ள நீதிபதிகள் புரிந்துகொள்ளவில்லையென்றால், அவர்கள் நீதிபதிகளாக இருப்பதற்குத் தகுதியுடையவர்களில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். கோர்ட்டுகளுக்கு வரக்கூடியவர்களின் விஷயங்களை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். கட்சிக்காரர்களின் பாஷையைப் புரிந்துகொண்டு அவர்களின் பாஷையிலேயே பதில் சொல்லவேண்டும். கட்சிக்காரர்கள் சொல்லும் விஷயங்களை மற்ற மொழியில் எழுதிக்கொள்ளக்கூடாது. அதேமொழியில் எழுதிக் கொள்ளவேண்டும். அவர்களுடையதீர்ப்பும் மக்களுடையபாஷையிலே இருக்கவேண்டும். எல்லாவிதமானகல்வியும் அவர்களுடைய பாஷையிலேயே அமையவேண்டும். இதைத்தான் மக்களின் அதிகாரமென்றும், சுயராச்சியத்தின் சக்திஎன்றும் சொல்லலாம். ஆகையினால்தான் பாஷாவாரிமாகாணம் அமைப்பதில் ஒருவிதமான தவறும் இல்லையென்று நான்நினைக்கிறேன். ஆனால் இதற்குயாருக நான்சொல்லவிரும்புவது என்னவென்றால் பாஷாவாரி அடிப்படையில் மாகாணம் அமைக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்களையெல்லாம் குறுகிய மனப்பான்மையுள்ளவர்கள் என்றெல்லாம் சிலர் குறிப்பிடுகிறார்கள். உபநிஷத்தின் சித்தாந்தம் நாம் எதிரே இருப்பவனை பாவி பாவி என்று சொல்லிக் கொண்டேயிருந்தால், அவன் பாவியாகவே ஆகிவிடுவான். பாஷைஅடிப்படையில் மாகாணம் அமையவேண்டுமென்ற கோரிக்கை கெட்டமனிதர்களின் கோரிக்கையல்ல, நல்லமனிதர்களின் கோரிக்கையாகவே அமைந்திருக்கிறது. ஆகையால் அப்பேர்ப்பட்டமாகாண அமைப்புகள் ஏற்படுகின்றனஎன்பதில் தவறு இல்லை. ஆனால் அவர்களிடத்தில் குறுகியமனப்பான்மை இருக்கிறதென்று குறைகூறப்பட்டதால் குறுகியமனப்பான்மை அவர்களிடத்தில் ஏற்பட்டுவிட்டது. எற்கெனவே கொஞ்சம் குறுகிய மனப்பான்மையும் இருந்திருக்கலாம், இதன்காரணமாக ஆங்காங்குசில இன்னல்கள் தலைதூக்கின. வருத்தப்படத்தக்க நிகழ்ச்சிகளும் நடந்தன. இதைக்கொஞ்சம் கம்பீரமாகவே அலசிப்பார்த்து வருகிறோம். ஏன்? காரணம், தவறான மனிதர்களுக்கு நாம் கௌரவம் கொடுத்துவந்தோம் என்பதுதான். 1942-வது வருஷம் பல விதங்களில் மக்களுக்குக் எடுத்துச்சொல்லி

# சுவாமி சிவானந்தரின் அறிவுரைகள்.

உண்மையில் உனக்குத் தெய்வம் வேண்டுமா? அவருடைய தரிசனத்திற்காக உண்மையாகவே நீ ஏங்குகிறாயா? உண்மையான ஆத்மீய பசி உன்னிடத்தில் இருக்கிறதா?

எவனொருவன் தெய்வதரிசனத்திற்காக ஏங்குகிறானோ, அவன் தான் அன்பைவளர்க்கமுடியும். அவனிடம்மட்டுந்தான் கடவுள் தன்னைக் காட்டிக் கொள்வார். தேவை, கிடைத்தல் என்ற பிரச்சனைதான் கடவுள். உண்மையிலேயே அவருடைய தேவையிருந்தால், உடனே அவர் கிடைப்பார்.

பிரஹலாதனைப்போல் மனமுருகிப் பிரார்த்தனைசெய். ராதையைப்போல்பாடு. வால்மீகி, துகாராம், துளசிதாஸ் இவர்களைப்போல் அவருடைய நாமத்தைஜபி. கோரங்கரைப்போல் கீர்த்தனைசெய், அவருடையபிரிவுக்காக மீராவைப்போல் கதறியழு. இந்த நிமிஷமே தெய்வதரிசனம் உனக்குக்கிட்டும்.

*முற்பக்கத் தொடர்ச்சி......*

வந்தோம். ரயில்தண்டவாளங்களைப்பிடுங்குவது தந்திக்கம்பிகளை அறுப்பது முதலியதீமைகள் 1942-ம் வருஷத்திய இயக்கத்தில்நடந்தன. அப்போது இந்தத்தீமைகளைச் செய்தவர்களுக்கு ஒருமதிப்புக் கிடைத்தது. ஆகவே ஒருநல்ல காரியத்திற்காக ஹிம்சைமுறையை அன்று பின்பற்றியிருப்பதை நாம் ஒப்புக்கொண்டோமானால், இன்றைக்கு பாஷாவாரிமாகாண அமைப்பு என்ற நல்ல காரியத்திற்காக ஹிம்சைசெய்யும்பொழுது நாம் என்னசெய்வது?

## ஒளி உன்னுள்ளே இருக்கிறது.

எப்பொழுதும் நேர்மையாகவே இரு. ஒருபொழுதும் அப்பாதையிலிருந்து நழுவாதே. நிமிர்ந்துநில். மனோதிடத்துடனிரு. எதற்கும் அஞ்சாதே. உண்மையைக் கைக்கொள். எங்கும், எப்புறமும் அதைப்பரப்பு, பறைசாற்று.

ஆத்மீயப்பாதையில் முன்னேறு. ஒளி உன்னுள்ளே இருக்கிறது. மனதை இறைவனிடம் செலுத்து. அகங்காரம், மமதை செருக்கு இவற்றை ஒழி. உலகசகோதரத்துவத்தை வளரச்செய். எல்லோரிடமும் அன்புகொள். நீ நீண்டநாள்வாழ்வாய்.

புலன்களை அடக்கு. அதிகநம்பிக்கையுடன் உண்மையுடனும் மனமுருகிப் பிராத்தனைசெய். கடவுள் உண்டென்று திடமாக நம்பு. ஆத்மீயவழிபாடுகளின் பலத்தில் அசையா நம்பிக்கைகொள் எளிமை, அடக்கம் இரண்டையும் கைக்கொள். நீ அமரத்துவம் எய்துவாய்.

## வாழ்க்கையைப்பற்றிய பாடங்கள்.

தினமும் காலையில் 4– மணிக்கு துயிலெழு. அதிகாலையில் பகவானுடைய நாமத்தை, நாமகீர்த்தனை உருவத்தில் பாடப்பழக்கம் செய்துகொள். ஹரிநாமத்தைப் பாடுங்கால் அவரே உன்னுடைய இருதயத்தில் வீற்றிருந்து நீ பாடுவதையெல்லாம் கேட்கிறார் என்று நினைத்துக் கொள்.

பகவக்கீதை, இராமாயணம்; பாகவதம் தேவார திருவாசகங்கள், விஷ்ணுசகஸ்ரநாமம், லலிதாசகஸ்ரநாமம் இவற்றை தினமும் அரைமணியிலிருந்து ஒருமணிநேரம் பாராயணம்செய். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படி. எதுநேரினும் உண்மையேபேசு. சிறிதே பேசு. ஆனால் இனிமையாகப் பேசு.

தெய்வீகம் உன்னுள்ளே இன்னும் பிரகாசமாக வளரட்டும்! நீர் நேர்மையான பாதையில் நடப்பாயாக! இவ்வாழ்விலேயே உனக்கு தெய்வதரிசனம் கிட்டுவதாக.

## நல்லவனயிரு நல்லதுசெய்

"எப்போதும் பற்றுநீக்கிச் செய்யத்தக்க தொழிலைச் செய்து கொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்துகொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகின்றான்" இது கீதையின் உபதேசம்.

நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் மனிதனின் உள்ளத்தில் வேரூன்றிவிட்டால், அவன் செய்வனவற்றிற்கு ஒருகாரணம் தேடுவதில்லை. பிறருக்குத்தொண்டுசெய்வதிலும் நன்மை செய்வதிலும் அவன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறான். உண்மையில் தன்னலமற்ற சேவை செய்வதில் ஒரு தனிஆனந்தம் இருக்கிறது.

விரிந்த நோக்கம்கொள். உனது மனதைச் சுத்தப்படுத்திக் கொள். தன்னலமற்ற சேவைசெய்யும் தன்மையில் வாழ். வாழ்க்கையின் உன்னதலட்சியம், பயன் இவற்றிற்காக ஒவ்வொருநிமிஷமும் வாழ். அப்போதுதான் நீ அப்படிப்பட்ட தொண்டின் சிறப்பை அறியமுடியும்.

தன்னலமற்ற தொண்டில் நீ சிறந்த யோகியா வாயாக! அழிவற்ற அமரத்துவத்தின் ஆனந்தத்தை அனுபவிப்பாயாக!

**மலிவு விலை.**

யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் அவர்களால் எழுதப்பெற்ற தெளிபொருள் விளக்கத்துடன்கூடிய **திருமந்திர விளக்கம்** இரண்டரைரூபா அடக்கவிலை உள்ளது. தபாற்செலவுட்பட ஒருரூபா முப்பத்தைந்துசதத்திற்குக் கொடுக்கப்பெறும். வேண்டுவோர்

**ஆத்மஜோதிநிலையம், நாவலப்பிட்டி.**

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

# யோக ஆசனங்கள்.

[S. A. P. சிவலிங்கம், ஞானகுரு யோகாசனசாலை, சேலம்.]

## கடவுள் வணக்கம்

ஈ யென்று நானொருவரிடம் நின்று கேளாத
இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது
இடுவென்ற போதவர்க்கிலை யென்று சொல்
லாமல், இடுகின்றதிறமும் இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும் நானென்றும்
உன் நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாதமனமும் மெய்ந்நிலை
யென்றும், நெகிழாத திடமும் உலகில்
சீயென்று பேயென்று நாயென்று பிறர் தமைத்
தீங்கு சொல்லாத தெளிவும்
திறமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்து
நின், திருவடிக் காளாக்குவாய்.........

## பொது நோக்கங்கள்.

மனிதனுகப் பிறந்த நாம் ஆரோக்கியமாகவும், ஆனந்தமாக வும், திடமாகவும், திடமனதுடையராகவும் திகழவே கடவுள் நம் மைப் படைத்தார். ஆனல் காலக் கிரமத்தில் தியவழியிலும், துக் கத்திலும் காயாந்தகாரனுகை உழன்று கடவுளை மறந்து பலவழிகளில் துக்கித்து வியாதிக்காளாகின்றோம். வியாதிலந்தும் பின் திருந்தாது பலவித துஷ்டத்தனத்துக்கும் வழி கோணி மறுபடியும் உழன்றுழ ன்று பரிதவிக்கின்றோம். வியாதி வருவது கடவுளின் ஞாபகமிருக் கவே. ஞாபகப்படுத்தவே வருவிக்கின்றார். ஆனல் நாம் அதை மறந்துவிடுகின்றோம். மானிடராய்ப் பிறத்தலரிது. என்னும் திரு வாக்கை கடைப்பிடிப்போர் சொற்பம். மானிடராய்ப் பிறந்தும் ஆரோக்கியமாகவும், வியாதியின்றியும் திடமனதுடன் அமைவது மிகுந்த துர்லபம். "உடம்பின் பயனுவதெல்லாம் திடம்பட வீச னைத்தேடு" என்றது ஔவை குறள்.

ஏன் கடவுள் கொடுத்த அறிவைத் தீயனவாக்கி, துன்மார்க்க நெறியில் உழன்று, பலவித இடைஞ்சல்களை உண்டாக்கிக் கொள்கின்றோம். கடைசியில் ஒருவாறு மனத்தின் இடைஞ்சல் அமைதிக்கடல்போல் ஒழிந்தபின்பும் போனதை [சென்றதை] நினைந்து, நினைந்து நம் வாழ்க்கையைப் பாழாக்கினோமென நொந்து கொள்கின்றோம். பின் அவற்றால் மனவமைதி, திடம் முதலியன குன்றி வியாதிக்கு வழிதேடிக் கொள்கின்றோம். இவைகளெல்லாம் நம் துர்க்குணங்களும், சேட்டைகளுமே. கண்இருந்தும் குழியில் விழுபவர்போல் அறிவிருந்தும், ஆத்மாவையறியவும், உடலாரோக்யத்தைக் காப்பாற்றவும் திடமற்றவராயிருக்கின்றோம். காரணம் பலவித துர்க்குணங்களின் செய்கையும், திடமனமின்றியும், ஆராச்சியின்றியும், கோபத்துக்கு அடிமைப்பட்டும் இன்னும் சில தீய குணங்களுக்கு நாம் நம் புலன்களை, அவைகளின் வழியே விட்டுவிடுவதால், காலக்கிரமத்தில் இக்காட்டுமிராண்டித் தனமெல்லாம் நம்முள் ஏற்படுகின்றது. இவற்றைப் போக்கி ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருக்கவே கடவுள் நம்மை படைத்தார்.

இவற்றுள் அதாவது உடலின் சதையைப் பெருக்க பல விளையாட்டுக்களுள, டம்பெல்ஸ், பார்பெல், குடுகுடு விளையாட்டு, தாண்டல், ஓட்டப்பந்தையம்; இசட தூக்குதல்; கசரத், பஸ்கி; கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலேறுதல், சிலம்பம் இன்னும் பல விளையாட்டுக்களுள. தற்காலத்தில் பெரும்பாலும் காலக்கிரமத்தில் இவ்விளையாட்டுக்களெல்லாம் அற்றுப் போய்விட்டன. ஏதோ, எங்கோ மூலைக்கொவ்வொன்றாக இவ்விளையாட்டுகளைக் காணலாம். ஆனால் பூரணமாக ஆதரிப்போர் ஒருவரேனுமிலர். காரணந் திடமனதும்; சுறுசுறுப்புமில்லாமையே.

முற்காலத்தில் நம்தேசத்தில் பெரிய, பெரிய மஹான்களும் சித்தர்களும் இருந்திருக்கின்றனர். அவர்களின் உபதேசமும்; ஆன்மநெறியும் ஒருசிலர் கடைப்பிடித்து வருகின்றார்கள். ஆனால் தற்காலத்தின் நாகரிகத்தால் அதுவும் மறைந்துவிட்டது. எத்தனையோ புத்தகங்கள் எத்தனையோகாட்சிகள் நம்மனதைக் கவர்கின்றன, இவற்றிலெல்லாம் மனம் சென்று பின்எவ்விதங்களுக்கும் திருந்தாமல் கண்டகண்ட புத்தகங்களைப் படிப்பதும் அவ்வழியிலேயே

சென்று மனம் அலேவதும் இன்றும் கண்கூடாகப் பார்க்கின்றோம். அறிவையறிந்து யோசிக்காமல் செய்தகாரியங்களே இவைகள்.

இவ்வாறு முற்காலத்தில் மகான்களும் தேவர்களும் ரிஷிக ளும் தங்களின் யோகானுபவத்தை பற்பல பாஷைகளில் சொல்லிச் சென்றனர். அவை ஒருசிலரால் மொழிபெயர்க்கப்பட்டு பலவித பிரதிகளுடன் விற்பனேக்குக் கிடைக்கின்றன. யோகத்திலிருந்த பெரும் ரிஷிகளெல்லாம் தங்கள் அனுபவத்தையே சொல்லிச் சென் றனர். அவற்றில் யோகத்தைப்பற்றி பல விளக்கமும் அங்கங்களு முண்டு. அவற்றையனுசரித்து நாம்கடைப்பிடித்தால் நம்வாழ் க்கை சீர்பெற்று சிரஞ்சீவியாய் வாழலாம். அதுவே யோகாசனம்.

## யோகாசனத்தின் நோக்கமும் அதன் பலனும்.

யோகாசனம் என்றால் நிலேயான இருக்கை, நேர்மையான வழி எனப் பகருவதுண்டு. யோகாசனத்தில் பல நிலேகளுள. ஒவ்வோர் ஆசனத்துக்கும் தக்க பலனும், தீவிர ஐக்கியமும் ஏற்படுகின்றது. ஒரு சிலருக்கே யோகாசனத்தின் நெறி தெரியவரும். இவ்வாச னத்தால் வியாதியின்றியும், வியாதியைக் குணப்படுத்துவதும். தியா னம், மனமடக்கம், அறிவுப்பெருக்கம், நற்செய்கை, மனச்சுத்தம், திடவைராக்கியம், உடல்நலம், ஊக்கம், மூளேச்சிறப்பு, தீயவழி களே விட்டொழித்தல், ஆக்கவேலே, கடவுளேக்காண ஆவல் முத லிய நற்பண்புடன் அமைந்த பல நற்செய்கையை நாட்டலாம். ஆசனத்தையே அறியாதவர் ஒரு சிலர் இவை எல்லாம் சர்க்கஸ் காரன்கள்வித்தைகளெனவும், நாம்செய்ய அருகதையற்றவைகளெ னவும், செய்வதாய் இருந்தால், காட்டுக்குச் சென்று தவம் செய் வதுபோல் செய்து அங்கேயே காலத்தைக் கழிப்பவருக்குத்தான் இவை ஏற்றது என்றுச் சொல்வர்.

இல்வாழ்க்கையிலிருந்துகொண்டும் செய்து பலன் பெறலாம் எல்லாவற்றுக்கும் மனவடக்கமே தேவை, யோகாசனத்தால் சகல நன்மைகளுமுண்டாகும் எவ்வியாதியாயிருப்பினும் மருந்தின்றி யோகாசனத்தால் போக்கிக்கொள்ளலாம். "அஞ்சா நெஞ்சமே வியாதியில்லா நெஞ்சம்" என உடல் நல்ல திடாரோக்கியமுறும், ஆண்டவன் கொடுத்த இச்சடலத்தை ஆரோக்கியமாகவும். திட மாக்வும் வைத்திருப்பதே உயர்ந்தது. சோர்ந்து, குனிந்து, குறுகித் தடைப்பட்ட நாட்களும், மாதங்களும் சென்றன. புதிய உணர்வு

# திருப்போரூர்ச் சந்நிதி முறைத்திரட்டு.

(சிதம்பரசுவாமிகள்)

1 தஞ்சமென வந்துன் சரணடைந்த நாயினேன்
வஞ்சமன நினைவால் வாடினேன்—வஞ்சமனம்
நீக்கித் திருப்போரூர் நின்மலா நின்னடிமை
ஆக்கி எனையாளு வாய்.

2 நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா என்னை
ஒறுத்தால் எனக்கார் உறவு.

3 மெய்ப்பொருளாம் நின்னை விரும்பியின்ப மேவாது
பொய்ப்பொருளை நாடியிடர்ப் போந்தேனைச்—செப்பரிய
மட்டழகார் சோலை மலிந்ததிருப் போரூரில்
கட்டழகா காத்தாள் கடன்.

4 கண்ணிற் கருமணியே கற்பகமே கற்றோர்கள்
உண்ணிற்கும் ஓரொளியே ஓர் பொருளே—எண்ணிற்கும்
போரூர் இறையே புனிதநிறை ஆனந்தச்
சீரூரில் நாயேனைச் சேர்.

---

*முற்பக்கத் தொடர்ச்சி*

புதிய பலம், பெற்று யோகாசனம் செய்து அறநெறியைக் கடைப்பிடியுங்கள். எவ்வியாதியையும் போக்கி புதுமனிதராகலாம், நம் மனம், ஆத்மா இவைகளைத் தூயதாக வைத்துக்கொண்டால் எவ்வளவு இன்பகரமாக இருக்கலாம். புலனறிவு கொண்ட விலங்குகள் கூட சில நேரங்களில் எவ்வளவு அறிவுள்ளவைகளாக நடந்துகொள்கின்றன. மனிதனாகப் பிறந்த நாம் ஏன் அவ்வாறு வாழ முடியாது? கடவுள் கொடுத்த அறிவையறிந்து ஆத்மீகத் துறையிலீடுபடவும், திடாரோக்கியமாகவும் இருக்க யோகாசனத்தைப் பயிலுங்கள். உற்ற தோழன் புது தெம்பு, புது பலம், கிட்டும், இன்றே யோகாசனத்தைப் பயில திடம் கொள்ளுங்கள். உறுதி பயிலுங்கள்.

(தொடரும்)

# "ஞானப்பொன்"

(ஓ. இரா. அத்ரி)

1 பொன்னுள் ஒளியன்னைப் பூரணமதா யெங்கும்
மன்னும் அருள்ஞான மாணிக்கம்—அன்ன
அருண கிரிரமண னாகினா னன்பரக
இருளொழித் தான் வாழ்கவெனஎண்.

2 மண்ணும் நிலை எங்கே ஏதென்று சாவிலகம்
கண்ணுள் ஒளிபோலக் காணென்றான்—நண்ணும்
அடியார் மயலொழித்தான் அண்ணாமலை ரமணன்
அடிவாழ்க நாமதுவே யாம்.

3 ஆமென்ன கத்தும் அருணாசலத் தலத்தும்
நாமென்றனைத் தையும் நாடிடத்தும்—தாமென்
றழகம்மை ஈன்ற அழகு ரமணேசனே
கழல் வாழ்த லெற்குக் கலன்.

4 கலங்கா துலகியலாம் கட்டினி லென்று
மிலங்கா துளம்பரந்த வின்பத்—தலங்காண்
மனித்த வடிவத்தில் மாரமணன் வீற்றிருந்து
இனித்த வமுதீயும் இன்று.

5 இன்றிவ் வுலகுய்ய இனியமெய் ஞானநெறி
சென்றிவ் விழி பிறவி சேராமல் —ஒன்றுண் [டு]
[அ] டருணா சலரமண னாமது நாமா மந்த
பொருள் நாடிலுள் ஞானப்பொன்.

# தமிழ்மறைக் கழகம்.

## அகில உலகத் தமிழ்மறைக் கட்டுரைப் போட்டி

முதற்பரிசில்: 100 ரூ. இரண்டாம்பரிசில்: 50 ரூ. மூன்றும்பரிசில்: 25 ரூ.

1 மேல்வரும் பொருள்களுள் ஒன்றினையேனும், அவைபோன்ற தொன்றினையேனும் பற்றி எட்டுப்பக்கங்களுக்குக் குறையாமல் எழுதி 1-4-57-க்குமுன் அனுப்புதல் வேண்டும்.

2 போட்டியிற் கலந்துகொள்வோர் 1-10-56-க்குமுன் [illegible]ள் கட்டுரை எழுதுவதற்குத் தெரிந்தெடுத்துக்கொண்ட பொருளைத் தமிழ்மறைக் கழகச் செயலாளருக்கு அறிவித்துத் தங்கள் பெயரைப் பதிந்துகொள்ளுதல் வேண்டும்;

3 மிகச் சிறந்தனவாகக் கருதப்படும் மூன்று கட்டுரைகளை எழுதியவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட பரிசில்கள் வழங்கப்படும்.

4 இக்கட்டுரைகளையும் ஏனைய கட்டுரைகளையுஞ் சேர்த்து நூலாக வெளியிடு முரிமை தமிழ் மறைக் கழகத்துக்கே யுரியது.

5 இவ்வாறு வெளியிடப்படும் நூலிலுள்ள கட்டுரைகளை எழுதியவரொவ்வொருவருக்கும் அந்நூலில் ஐந்து படிகள் பரிசிலாக வழங்கப்படும்.

6 போட்டி பற்றித் தமிழ்மறைத் கழக ஆட்சிமன்றஞ் செய்யும் முடிபுகளே இறுதியானவை.

## பொருள்கள்

உலகப் புலவர், குறள் நெறி, குறளுங் கீதையும், குறளுஞ் சிலம்பும், குறள் கூறும் சமுதாயம், குறள் கூறும் நாகரிகம், குறளுக்கு உரை எழுதினோர், தமிழ்மறை, திருக்குறளில் நவரசங்கள் திருக்குறளும் சங்கநூல்களும், திருவள்ளுவமாலை, தேடக்கிடைக்காத செல்வம், நான் கண்ட வள்ளுவர், பொதுமறை, வள்ளுவர் வகுத்த அறம், வள்ளுவர் வகுத்த அரசு, வள்ளுவர் வகுத்த இன்பம், வள்ளுவர் வகுத்த குடும்பம், வள்ளுவர் சொல்லே வேதம், வள்ளுவர் கண்ட பெண்மை, வள்ளுவர் வகுத்த வழி, வள்ளுவமும் காந்தீயமும், வள்ளுவர் வாய்மொழி, வள்ளுவர் வகுத்த பொருளாதாரம், வள்ளுவர் காலத் தமிழகம், வள்ளுவர் காலம், வள்ளுவர் புலமை நயம், வள்ளுவரும் சமயக் கணக்கர்களும், வாழ்க்கை நூல், வாழ்வுக்கலை, விஞ்ஞானமும் வள்ளுவமும், வள்ளுவரும் தமிழ்ப்புலவர்களும் வள்ளுவரும் பிறநாட்டாரும்.

18/, அத்திடியா வீதி,
இரத்மலானை, இலங்கை.

Regd. at the G. P. O. as a News Paper H. D. 59/300

# நல்வாழ்வு

(ஆரோக்கிய நல்வாழ்வு மாதப் பத்திரிகை)

ஆசிரியர்: சீதாலக்ஷிமி குமாரசுவாமி

...யில் யோகாசனப் பெருமையைப் பற்றித் தமிழர்கள்
...ச் செய்த ஸ்ரீ. வி. என். குமாரசாமியின் மறைவுக்குப்
பின்னர் அத் தொண்டைத் தொடர்பாகச் செய்வதற்காக
சீதாலக்ஷிமி குமாரசுவாமி அவர்கள் நல்வாழ்வு என்
னும் மாதப் பத்திரிகை ஆரம்பித்துள்ளார்கள், நல்
வாழ்வு பல அம்சங்களும் பொருந்தி ஒரு குடும்பப்
பத்திரிகையாகத் திகழுகிறது.

சுவாமி சுத்தானந்த பாரதியார், ஸ்ரீ பெ. தூரன்: ஸ்ரீ எம்.எஸ்.
சுப்பிரமணிய ஐயர். ஸ்ரீமதி குகப்பிரியை, ஸ்ரீ எஸ். ராஜு
செட்டியார் முதலியோர் தொடர்பாக விஷயதானங்கள்
அளிக்கின்றனர்கள்.

வருடச்சந்தா இந்தியா சிலோன் 6 ரூபா 12 அணா
வெளிநாடுகள் 7 ரூபா 2 அணா

மனேஜர் நல்வாழ்வு
216, தி, ஹைரோட் சென்னை 21
என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

## சந்தா நேயர்களுக்கு

ஒரு சில நேயர்களுடைய சந்தாப் பணம் இன்னும் வந்து சேரவில்லை சந்தா அனுப்பாதோர் ஆத்மீக வளர்ச்சி கருதியும் தமிழ் மொழி வளர்ச்சி கருதியும் உடனே அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

விலாசமாற்றம் செய்வோர் சந்தாப்பணம் அனுப்புவோர் சந்தா இலக்கம், பழைய விலாசம் புதிய விலாசம் என்பவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி [இலங்கை]

Hony. Editor, K. Ramachandra,
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 1[illegible]-7-56